**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 95/2025</u>**

**<u>நாள் – 16.04.2026</u>**

**<u>PW – 1</u>** கற்பகம்

**க/பெ.** லேட்.பாலமுருகன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026.**

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்காத நிலையில் இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால்தான் விபத்து நடந்ததாகவும் சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. விபத்து நடப்பதற்கு முன்பாக எனது கணவர் பாலமுருகன் ஈச்சர் வாகனத்தில்தான் பள்ளிக்கு உணவுப்பொருட்களை வழங்க வேண்டி சென்றிருந்தார். விபத்து சமயம் அந்த ஈச்சர் வாகனத்தில் இருந்து எனது கணவர் கீழே இறங்கி வாகனத்தின் பின்புறத்தில் பள்ளியின் கேட்டின் அருகே நின்று கொண்டு வாகனத்தை பின்புறமாக வருமாறு சைகை காட்டிக்கொண்டிருந்தார் என்றும், அந்த சமயம் எனது கணவர்தான் வண்டி பின்புறமாக வருவதை கவனிக்காமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருந்து வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்தானது முழுக்க முழுக்க எனது கணவரின் அஜாக்கிரதையால் நடந்துள்ள நிலையில் இந்த 4ம் எதிர்மனுதாரர்

காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

2. 4, 5 மனுதாரர்கள் எனது மாமியார் மற்றும் மாமனார். அவர்கள் இருவரும் தனியாகத்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வருகிறேன். எனது கணவர் பாலமுருகனும் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தில் பில் கிளர்க்காக வேலை பார்த்து வந்தார். எனது கணவரின் வருமானத்தை கொண்டுதான் மனுதாரர்களான நாங்கள் சார்ந்து வாழ்ந்து வந்தோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் ம.சா.ஆ.14 மற்றும் ம.சா.ஆ.15 ஆவணங்கள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அலுவலக அதிகாரிகளைக் கொண்டு நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள ரூ.2,00,00,000/- இழப்பீடு அதிகமானது என்றும், அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>1, 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1ம் எதிர்மனுதாரர் ஈச்சர் வாகனத்தை முறையாக ஹாரன் அடித்துக்கொண்டுதான் பின்புறமாக ஓட்டிக்கொண்டு வந்தார் என்றும், எனது கணவர்தான் எதிரில் இருந்த நபரிடம் பேசிக்கொண்டே வாகனத்தின் பின்புறமாக குறுக்காக நடந்து சென்றதால்தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதல்ல என்றும், எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால்தான் நடந்தது

என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட ஈச்சர் வாகனத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.16 18:41:27 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**